# தேடல் (A SEARCH)



எப்பொழுதும் என் எண்ணங்களில் பிரதிபலிக்கும் ஒரு தேடல்...
எப்பொழுதும் என் எண்ணங்களில் வழியும் ஒரு தார்மீகக்கோபம்...
என் இதழோரம் எப்பொழுதுமே ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறிய புன்னகை...
என் மனதில் ஆர்ப்பாட்டமே இல்லாமல்
இழையோடிக்கொண்டிருக்கும் சொல்லமுடியாத ஒரு சோகம்...
எப்பொழுதும் எதையோ தேடிக்கொண்டிருக்கும் என்  உள் மனம்...
எப்பொழுதும் நல்ல சிந்தனைகளே இருக்க வேண்டும் என்ற
குறிக்கோளுக்காக ஓயாமல் போராடிக்கொண்டிருக்கும் என் நினைவுகள்…
யாரையும், எந்த ஒரு விஷயத்தையும் உணர்வு பூர்வமாக தொட நினைக்கும் பாங்கு...
என் மனதை அழகாக வருடிய விஷயங்களை, அதைவிட அழகாக எப்படி வெளிப்படுத்துவது என்ற ஓயாத சிந்தனை...
எத்தனை துயரமான விஷயமேயானாலும்   கண்களையும் காதுகளையும் மட்டும் அதன் அருகாமையில் இட்டு சென்று, இதயத்தை எந்த

சந்தர்பத்திலும் அந்த துக்கத்திலிருந்து  தள்ளி வைத்துப்பார்க்கும் மனப்பக்குவம்...
எல்லோரிடத்திலும் உண்மையாகவும், அன்பாகவும், பழக வேண்டும் என்ற நியாயமான அவா...
பொய் மனிதர்களை எப்பொழுதும் தள்ளியே வைத்துப்பார்க்கும் போக்கு...
சந்தர்ப்பவாதிகளை உடனே அடையாளம் கண்டு விலகி ஓடும் கால்கள்...
பல நேரங்களில் மௌனத்தையும், புன்சிரிப்பையுமே பதிலாக சொல்லி விலகிவிடும் புத்திசாலித்தனம்...
சில தருணங்களில் சுய பச்சாதாபதிற்கு ஏங்கும் மனம்...
சில தருணங்களில் பல விஷயங்கள் தெரியும் என்ற அசட்டுத்தனமான மமதை...
ஒன்றும் தெரியாத ஜடமோ என்ற ஐயம் சில நேரம்...
எப்பொழுதும் உண்மை பேச முயற்ச்சிக்கும் நாக்கு...

இப்படியாக, என்னை பற்றிய தேடல் இதோ தொடங்கிவிட்டது...

GAYATHRI RAMESH
GRD IYERS

GRD IYERS